සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| පළමු වාර පරීක්ෂණය | 2018 | 11 ශ්‍රේණිය |
| முதலாம் தவணைப் பரீட்சை | 2018 | தரம் 11 |
| First Term Test | 2018 | Grade 11 |

| | | |
|---|---|---|
| புவியியற் கல்வி | I | ஒரு மணி |
| භූගෝල විද්‍යාව | I | පැයක් |
| Geography | I | One Hour |

**கவனிக்கவும்**

*. சகல வினாக்களுக்கும் விடை தருக.

*. இலக்கம் 01 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களில் உள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1) மங்கனீசியம் என்பது ……………………… என்ற கனிய வகையில் அடங்கும்

(எரிபொருள் கனியம், உலோகக் கனியம், உலோகமல்லாத கனியம்)

2) புவியின் மேற்பரப்பின் பரப்பளவு ………………………. மில்லியன் சதுர கிலோமீற்றர்களாகும்.

(510, 500, 516)

3) உலகில் வருடாந்த காரீய உற்பத்தியில் 60% சத வீதத்தினைக் கொண்டுள்ள நாடு ……………… ஆகும். (கொரியா, இந்தியா, மெக்ஸிகோ)

4) புவியின் மோகோறோவிக் தொடர்ச்சியின்மை……………………….. என்ற பகுதிக்குள் உள்ளடக்கப்படுபவை (புவியின் ஓடுக்கும் மையமுக்கும் இடைப்பட்டது, புவியின் ஓட்டுக்கும் மூடிக்கும் இடைப்பட்டது, புவியோட்டுக்கும் மையத்திற்கும் இடைப்பட்ட பகுதி)

5) இலங்கையின் அயன மண்டலக் காடுகளை ………………………….. காணலாம். (ஹோட்டன் சமவெளி, புத்தளம், கன்னெலியா)

6) இலங்கைக்குரித்தான ஆள்புலக் கடல் எல்லை ……………………… கடல் மைல்களாகும். (12, 24, 200)

7) தற்போது இலங்கையில் எஞ்சியிருக்கும் இயற்கைக் காடுகள் ……………………… சதவீதமாகும். (20%, 22%, 24%)

8) பூமியை நோக்கி வருகின்ற சூரியக் கதிர்களில் அடங்கியுள்ள உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களை உறிஞ்சிக் கொள்ளும் ஓசோன்படை அமைந்திருப்பது (படை மண்டலம், இடைமண்டலம், வெப்ப மண்டலம்)

9) புவியின் உட்பகுதியிலுள்ள மக்மா குளிர்வடைவதனால் ………………………. பாறைகள் உருவாகின்றன. (தீப்பாறைகள், அடையற் பாறைகள், உருமாறிய பாறைகள்)

10) சீமா மற்றும் சீயல் எனும் இருபடைகளினால் அமைந்துள்ள பகுதி (ஓடு, மூடி, மையம்)

**இலக்கம் 11 இல் இருந்து 20 வரை தரப்பட்டிருக்கும் ஒவ்வொரு வினாவும் சரியாயின் "ச" எனவும் பிழையாயின் "பி" எனவும் கோடிடுக.**

11) சிங்கராஜ வனம் அயன மண்டல மழைக்காடு ஆகும். (ச / பி)

12) நைல் நதி ஊற்றிலிருந்து உற்பத்தியாகும் நதி (ச / பி)

13) இலங்கையில் சனத்தொகை அடர்த்தி மிகக் குறைந்த மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டமாகும் (ச / பி)

14) இலங்கையில் முதலில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது கம்பஹா மாவட்டத்திலுள்ள கெனரத்கொட பூங்காவில் ஆகும். (ச / பி)

15) சமுத்திர ஓடு எரிமலைக் குழம்புப் பாறைகளைக் கொண்டிருக்கிறது. (ச / பி)

**தொடக்கம் 20 வரையான வினாக்களின் இடைவெளிக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

16) விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இலங்கையில் மக்கள் வாழ்ந்தனர் என்று ……………………….. வரலாற்று நூல் கூறுகின்றது. (மகாவம்சம், சூழவம்சம், தாதுவம்சம், சேரவம்சம்)

17) கி.பி.2050 ஆம் ஆண்டளவில் உலகின் சனத்தொகையில் பெரும்பகுதி வாழும் வலயமாக …………………………….. காணப்படும். (ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா)

18) ஹோட்டன் சமவெளி, பீதுறுதாலகால, நக்கில்ஸ், சிவனொளிபாதமலை ஆகிய உயர் நிலப் பிரதேசங்கள் காணக் கூடியது ……………………………… காடுகளில் ஆகும். (அயன மண்டல, இடைத்தர என்றும் பசுமையான, மலைநாட்டு ஈரவலயம் தாழ்நில ஈரவலயம்)

19) பம்பாஸ் புன்னிலம் காணக்கூடிய பிரதேசம் (வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, ஆசியா)

20) பொருத்தும் கைத்தொழிலுக்கு உதாரணமாக ……………………….. குறிப்பிடல். (விமானம், மோட்டார் வாகனம், புடைவை, இலத்திரனியல் உபகரணம்)

**தொடக்கம் 25 வரை தரப்பட்டுள்ள வினாக்களில் உள்ள இடைவெளிகளை பொருத்தமான விடைகளைக் கொண்டு நிரப்புக.**

21) இலங்கையின் நிலப்பகுதியின் அளவு …………………………. சதுர கிலோமீற்றர் ஆகும்.


22) முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட கடல்களில் கஸ்பியன் மற்றும் ……………………….. அடங்கும்.

23) …………………………. என்ற நதி உருகிய பணியிலிருந்து உற்பத்தி ஆகின்ற நதியாகும்.

24) புவியின் மையத்திலிருந்து மூடியை வேறுபடுத்தும் எல்லை …………………………….. என அழைக்கப்படுகின்றது.

25) உலகின் காலநிலைப் பரம்பல் பற்றிய கருத்தினை கி.மு.384 முதன் முதலில் வெளியிட்டவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்த …………………………… என்பவராவார்.

**வினா இலக்கம் 26 தொடக்கம் 28 வரையான வினாக்களுக்கு விடையளிக்க தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தைப் பயன்படுத்திக் கொள்க.**





26) இலங்கையின் குறைந்த சனத்தொகையைக் கொண்ட மாவட்டம் ................................ என்ற எழுத்தில் காட்டப்பட்டுள்ளது.

27) சிறு ஏற்றுமதிகள் பொருட்களை உற்பத்தி செய்வதில் பிரசித்தி பெற்ற மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து ................................ ஆகும்.

28) ரூற்றைல் கனிய மணல் அதிகமாகக் காணப்படும் பிரதேசம் .......................... என்ற எழுத்தில் காட்டப்பட்டுள்ளது.

**வினா இலக்க 29 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளிக்க கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்துக.**




29) மேலே தரப்பட்ட அட்டவணையின்படி இரும்பு மற்றும் உருக்கு ஆகியவற்றின் உற்பத்திக்கு அதிகளவில் பங்களிப்புச் செய்யும் நாடு எது?

30) மேலே தரப்பட்டுள்ள அட்டவணையின்படி இரும்பு மற்றும் உருக்கு மிகக் குறைந்த அளவில் உற்பத்தி செய்யும் நாடு எது?

**இலக்கம் 31 இருந்து 35 வரையான வினாக்கள் "அ" மற்றும் "ஆ" என இரு நிரல்களைக் காண்டுள்ளது. அவற்றின் பொருத்தப்பாட்டை தொடர்புபடுத்தினால் கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்து. அதன் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

31) புவி மேற்பரப்பில் நீரின் பரம்பல் பல்வேறு அமைப்பில் பரவிக் காணப்படுகின்றது. உலகில் நீர் பரம்பியுள்ள முறை நிரல் ''அ'' விலும் அதன் சதவீதம் நிரல் ''ஆ'' விலும் தரப்பட்டுள்ளன. இரு நிரலையும் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி.

| நிரல் அ | நிரல் ஆ |
|---|---|
| சமுத்திர நீர் | A 2.5% |
| நன்னீர் | B 20% |
| தரைக் கீழ் நீர் | C 97.5% |
| | D 52% |

1. A,B,C  2. C,A,B  3. B,C,D  4. A,B,D  (………)

32) இலங்கை ஒரு விவசாய நாடு. இங்கு உற்பத்தி செய்யப்படும் பயிர்கள் நிரல் ''அ'' விலும் அதனுடன் தொடர்புடைய ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் நிரல் ''ஆ'' விலும் தரப்பட்டுள்ளன. இரண்டையும் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் சரியான விடை

| நிரல் அ | நிரல் ஆ |
|---|---|
| தேயிலை | A எம்பிலிபிடிய |
| தென்னை | B அகலவத்தை |
| இறப்பர் | C தலவாக்கலை |
| | D மாத்தளை |

1. B,C,D  2. C,A,B  3. C,B,A  4. A,C,D  (……..)

33) கனியங்களை பின்வரும் முறையில் வகைப்படுத்தலாம். கனிய வளங்களின் வகைகள் நிரல் ''அ'' விலும் அதில் உள்ளடக்கப்படும் கனியங்கள் நிரல் ''ஆ'' விலும் தரப்பட்டுள்ளன. இரண்டையும் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடை

| நிரல் அ | நிரல் ஆ |
|---|---|
| எரிபொருள் கனியங்கள் | A காரீயம், மணல், சுண்ணக்கல் |
| உலோகக் கனியங்கள் | B இரும்பு, மங்கனீசியம் |
| உலோகமல்லாத கனியங்கள் | C நிலக்கரி |
| | D செம்பு, பொசுபேற் |

1. B,C,D  2. A,B,C  3. C,B,A  4. A,C,D  (……..)

34) பல்வேறு காரணிகளின் செல்வாக்கினால் பல்வேறு விதமான மண் வகைகள் உருவாகியுள்ளன. மண் வலயங்கள் நிரல் ''அ'' விலும் அதில் அடங்கும் மண் வகை நிரல் ''ஆ'' விலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் சரியான விடை

| நிரல் அ | நிரல் ஆ |
|---|---|
| வரண்ட வலயம் | A செங்கபில மண் |
| கரையோர வலயம் | B செங்கபில செம்பூராண் மண் |
| ஈர வலயம் | C செம்மஞ்சள் பொட்சோல்மண் |
| | D கல்சியமற்ற செங்கபில மண் |

1. A,C,B 2. A,D,B 3. B,C,D 4. D,C,A (……..)

35) உலக சனத் தொகையின் அடிப்படையில் கண்டங்கள் சில நிரல் ''அ'' விலும் அதன் சனத் தொகையின் சதவீதம் நிரல் ''ஆ'' விலும் தரப்பட்டுள்ளன. அதனை சரியாகத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் விடை

| நிரல் அ | நிரல் ஆ |
|---|---|
| 1. ஐரோப்பாக் கண்டம் | A 60% |
| 2. ஆபிரிக்கா கண்டம் | B 10% |
| 3. ஆசியக் கண்டம் | C 16% |
| | D 8% |

1. A,C,D 2. B,A,D 3. B,C,A 4. D,B,A (……..)

**இலக்கம் 36 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள விடைகளின் சாயின அல்லது மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

36) வகைக்குறிப்பின்ன அளவுத்திட்டம் என்பது

1. நேர்கோட்டு அளவுத்திட்டம் 2. விகித அளவுத்திட்டம்
3. அரை அளவுத்திட்டம் 4. மெற்றிக் அளவுத்திட்டம்

37) இலங்கையினது பொதுவான நீர் வடிகால் பாங்காக அமைவது

1. மரநிரை வடிகால் பாங்கு 2. ஆரை வடிகால் பாங்கு
3. அளியடைப்பு வடிகால் பாங்கு 4. சட்டத்தட்டு வடிகால் பாங்கு

38) தற்போது இலங்கையில் கடும் பாதுகாப்புக்கு உட்பட்ட இயற்கை ஒதுக்குகளாக………. மூன்றும் உள்ளன

1. உடவளவ, வஸ்கடுவ, மாதுருஓயா 2. கதிர்காமம், மின்னேரியா, வீரவெல
3. ஹக்கல, யால, ரிடிகல 4. கிரிதலை, உடவளளவ, வீரவெல

39) 1:50000 அளவுத் திட்டத்திற்கு அமைய மெத்திக் அளவுக்கமைய இலங்கை எத்தனை பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. 72 2. 80 3. 90 4. 92 (………)

40) முழு சனத்தொகையிலும் 76% அளவு வாழ்கின்ற இரண்டு கண்டங்களும் எவை?

1. அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா 2. ஆபிரிக்கா, ஆசியா
3. ஐரோப்பா, அவுஸ்திரேலியா 4. ஆசியா, ஐரோப்பா

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| පළමු වාර පරීක්ෂණය | 2018 | 11 ශ්‍රේණිය |
| முதலாம் தவணைப் பரீட்சை | 2018 | தரம் 11 |
| **First Term Test** | **2018** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| புவியியற் கல்வி | II | இரண்டு மணி |
| භූගෝල විද්‍යාව | II | පැය දෙකක් |
| **Geography** | **II** | **Two Hour** |

**கவனிக்க வேண்டியவை**

- **பகுதி I கட்டாயமாக விடையளிக்கவும்**
- **பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி I

1:50000 தேசப்படம் தொடர்பான வினாக்கள்

அ) i) இட விளக்கப்படத்தின் பிரதான அம்சங்கள் இரண்டினைத் தருக.

ii) 1:50000 இடவளக்கவியல் படத்தில் அளவுத் திட்டத்தை காட்டும் 2 முறைகளைக் குறிப்பிடுக.

iii) கீழே தரப்பட்டுள்ள பௌதீக அம்சங்கள் மற்றும் பண்பாட்டு அம்சங்களையும் நியமக் குறயீடு மற்றும் நிறங்களினூடாக வரைந்து காட்டுக.

1. கூம்புக் குன்று
2. தேயிலைப் பயிர்ச் செய்கை
3. பாடசாலை
4. புகையிரதப்பாதை / பிரதான பாதை
5. பௌத்த சமயத் வழிபாட்டுத் தளம்

iv) 1:50000 தேசப்படம் கற்பதினூடாக உமக்குக் கிடைக்கும் நன்மைகள் 3ஐக் குறிப்பிடுக.

ஆ) தரப்பட்டிருக்கும் உலகப்படத்தை அடிப்படையாகக் கொண்டு கீழே வரும் வினாக்களுக்கு விடை தருக.

i) படத்தில் A,B,C எனக் குறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களில் மத்திய தரைக் கடலைக் குறிக்கும் எழுத்து எது?

ii) D,E,F என்னும் எழுத்துக்களில் மடகஸ்கர் தீவைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?

iii) I,J,K எனக் குறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களில் அட்லஸ் மலைத் தொடரைக் காட்டும் எழுத்து எது?

iv) L,M,N எனும் எழுத்துக்களில் அமேசன் நதியைக் காட்டும் எழுத்து எது?

v) O,P,Q என்ற எழுத்துக்களில் உலக அரிசி ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள நாடான பிலிப்பைன்ஸ் நாட்டைக் காட்டும் எழுத்து எது?

இ) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.

i) A,B,C ஆகிய எழுத்துக்களில் விமலசுரேந்திர மின் உற்பத்தி நிலையத்தைக் காட்டும் எழுத்து எது?

ii) D,E,F ஆகிய எழுத்துக்களில் செங்கபில செம்பூரான் மண் பரவிக் காணப்படும் பிரதேசத்தைக் குறிக்குக் காட்டும் எழுத்து எது?

iii) I,J,K ஆகிய எழுத்துக்களில் இலங்கையின் கிழக்கு கரையோரப் பகுதிகளில் கனிய மணல் பிதவுகள் குறித்துக் காட்டும் எழுத்து எது?

iv) L,M,C ஆகிய எழுத்துக்களில் களுகங்கையைக் காட்டும் எழுத்து எது?

v) O,P,Q ஆகிய எழுத்துக்களில் கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தைக் காட்டும் எழுத்து எது?

## பகுதி II

2) i. இயற்கை வளங்கள் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii. புதுப்பிக்கக் கூடிய வளங்கள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. புதுப்பிக்க முடியாத வளங்களை சிக்கனமான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதை மூன்று காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

3) i. தீப்பாறை என்பதன் வரைவிலக்கணத்தைத் சுருக்கமாகத் தருக. (2 புள்ளிகள்)

ii. அடையற்பாறைகள் மூலம் கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. மண்ணின் இயல்பு மாறுதல் மற்றும் மண் விருத்திக்கு தடையாக இருக்கின்ற மனித செயற்பாடுகள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

4) i. வளிமண்டலத்தின் கட்டமைப்பைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)


ii. மாறன் மண்டலத்தின் சிறப்பம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. வளிமண்டலம் மாசடைவதால் மனிதன் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அப்பிரச்சினைகளைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் 3 ஐக் குறிப்பிடு சுருக்கமா விளக்குக. (5 புள்ளிகள்)

5) i. தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் A,B,C,D எனும் எழுத்துக்களால் காட்டப்படும் நெல் உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களை முறைப்படி பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii. நெற் பயிர்ச் செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. இன்று இலங்கையில் நெற்பயிர்ச் செய்கையில் பயன்படுத்தப்படும் நிலத்தின் அளவு மற்றும் உற்பத்தியின் அளவு அதிகரிப்பதற்கு சாதகமான காரணிகள் 3ஐக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)



6) i. உலகில் அயன மண்டல மழைக் காடுகள் பரவிக் காணப்படும் பிரதேசங்கள் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. மேற்குறிப்பிட்ட காடுகளில் காணக்கூடிய விசேட பண்புகள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)


iii. காடுகள் அழிக்கப்படுவதற்கான பிரதான காரணங்கள் 2ஐக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக. (5 புள்ளிகள்)

7) i. A உலகில் சனத் தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்கள் 2 ஐயும்
B சனத்தொகை ஐதாக வாழும் பிரதேசங்கள் 2 ஐயும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. சனத்தொகைப் பரம்பல் குறைவாகக் காணப்படுவதற்கான காரணிகள் 2 ஐக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (3 புள்ளிகள்)

iii. உலக சனத்தொகை வலயத்திற்கு வலயம் நாட்டுக்கு நாடு பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடுகின்றது. அதற்கான காரணம் என்ன? இரண்டு விடயங்களை விளக்குக. (5 புள்ளிகள்)

**(இ) பகுதி வினாவுக்கு விடையளிப்பதற்கான படம்**



1 (ஆ) பகுதி வினாவுக்கான உலகப் படம்

